**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**STC.No.1112/2023**

**Defence Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாலமுருகன் | **Caste** | : |
| **Father's Name** | : சங்கரேஷ்வரன் | **Calling** | : அஞ்சல் ஆய்வாளர், திண்டுக்கல் உப கோட்டம். |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 39/2025 |
| | | **Dated** | : 25.09.2025 |

**25.09.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

இவ்வழக்கு சம்பந்தமான நீதிமன்றத்தில் இருந்து அஞ்சலக கண்காணிப்பாளருக்கு சம்மன் வந்ததா என்றால் வந்தது. அவர் சார்பாக நான் ஆஜராகியுள்ளேன். 09.05.2023ம் தேதி RT No.472450521 எனது அஞ்சலகத்தில் இருந்து பதிவு தபாலாக அனுப்பப்பட்டுள்ளது. அந்த தபால் செந்தில் ராணி என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அஞ்சல் கவருடன் AD card அனுப்பப்படும் பெற்றுக்கொள்பவர் AD card–லும் அதே சமயம் delivery slip–லும் கையொப்பம் பெறப்படும். 10.05.2023 அன்று செந்தில்ராணி

வாங்கியதாக கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. அதில் செட்டியபட்டி postman கொடுத்த slip இணைக்கப்பட்டுள்ளது. Delivery note ல் செட்டியபட்டி postman செந்தில் ராணியிடம் டெலிவரி செய்து கையொப்பம் பெற்று தாக்கல் செய்த டெலிவரி slip, delivery noteல் 10.05.2023ல் இணைக்கப்பட்டுள்ளது. (**அந்த பக்கத்தில் உள்ள delivery slip xerox எதசா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எத்தனை ஆண்டுகளாக அஞ்சல் துறையில் பணியாற்றி வருகிறேன் என்றால் சுமார் 14 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். எங்களது அஞ்சல் துறையில் வழிகாட்தலுக்கு என்று அஞ்சலக Guide உள்ளது என்றால் சரிதான். **(என்னிடம் காட்டப்படும் அஞ்சலக வழிகாட்டுதல் விதி 36 அது ம.தசா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது Xerox Copy)** அந்த வழிகாட்டுதலின் படி தான் அஞ்சலக ஊழியர்கள் செயல்பட வேண்டுமென்றால் சரிதான். Rule 36ல் பதிவு தபால்களில் எவ்வாறு பெறுபவரிடம் சார்பு செய்யப்படவேண்டுமென்று வழிகாட்டுதல் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழிகாட்டுதலின் படி யாருக்கு சார்பு செய்கிறோமா அவரின் கையொப்பம் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபர் தான் சார்பு செய்து கையொப்பம் பெற வேண்டுமென்றால் சரிதான். மேற்சொன்ன முறையை தான் கடைபிடிக்க வேண்டுமே தவிர வேறு எந்த முறையும் இல்லை என்றால் சரிதான். எதசா.1ன் படி எவரால் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அவரால் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அசாஆ.5 வரிசையில் 03.06.2023ம் தேதி முதுநிலை அஞ்சல் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட புகார்தாரரின் வழக்கறிஞர் அனுப்பிய புகார் கடிதமும் அதன் பின்னிட்டு அந்த முதுநிலை கண்காணிப்பாளர் விசாரித்து அவர் வழங்கிய சான்றிட்ட ரசீதும் மேலும் அதுதொடர்பான online tracking report ம் எங்களுடைய அலுவலகம் சார்ந்த ஆவணங்கள் என்றால் சரிதான். அதசா.5ன் மூலம் செந்தில்ராணி என்பவருக்கு தபால் சார்பு

செய்யப்பட்டதாக தெரிய வருகிறது என்றால் சரிதான். முதுநிலை அஞ்சல் கண்காணிப்பாளரிடம் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டால் அவர் ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்த பின்னரே அறிக்கை சமர்ப்பிப்பார் என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.09.25 17:25:17 +0530

Judicial Magistrate No.II
Dindigul.